

மாநிலங்களவை உறுப்பினரும், தஞ்சாவூர் வடக்கு மாவட்டச் செயலாளருமான சு.கல்யாணசுந்தரம் நாடாளுமன்ற திட்ட வளர்ச்சி நிதி 4.75 கோடியில் கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில், ரூபாய் 6.17 கோடி மதிப்பில் புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு தலைமை கொறடா முனைவர்.கோவி.செழியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன்(கும்பகோணம்), முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா (பாபநாசம்), நிவேதா எம்.முருகன் (பூம்புகார்), கும்பகோணம் மாநகர மேயர் க.சரவணன், துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணைத்தலைவர் எஸ்.முத்துசெல்வம், இயக்குநர் பொது சுகாதாரம் மரு.செல்வ விநாயகம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### பட்டாசு சில்லறை விற்பனை நிலைய வெடி விபத்தில்

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 20 -

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையபட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் (17.5.2023) பட்டாசு உற்பத்தி செய்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கோட்டைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார், த/பெ. அமிர்தராஜ் (வயது 35) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### செம்பனார்கோயிலில் பெரியார் விருது பெற்ற

# மிசா பி.மதிவாணன் படத்திறப்பு நிகழ்ச்சி!

### அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைக்கிறார்! சிவ. வீ.மெய்யநாதன், நிவேதா எம்.முருகன், செ.இராமலிங்கம், எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை, மே. 20 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் தந்தையும், செம்பனார்கோயில் ஒன்றியக்குழு தலைவர் நந்தினிஸ்ரீதர் மாமனாருமான செம்பனார்கோயில் மிசா.பி.மதிவாணன் கடந்த 4.5.2023 அன்று இயற்கை எய்தினார்.

தலைவர் கலைஞர் அவர்களை 1993ல் நடைபெற்ற பொதுக்குழுவில் முன்மொழிந்த மிசா பி.மதிவாணனுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தலைமைக் கழகம் சார்பில் பெரியார் விருது வழங்கப்பட்டது.

மிசா பி.மதிவாணன் மறைவுச்செய்தி அறிந்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டு இருந்தார்.

இதையடுத்து இவரது படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (20.5.2023 சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு செம்பனார்கோயில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்குகிறார். சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞான வேலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமுர்தவிஜய குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மிசா பி.மதிவாணன் படத்தை கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே. என்.நேரு திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தி பேசுகிறார். அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாண சுந்தரம், என்.கௌதமன், பூண்டி கே.கலைவாணன், துரை.சந்திரசேகரன், கா. அண்ணாதுரை, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், அரசு தலைமை கொறடா கோவி.செழியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம்,

சட்ட மன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், எஸ்.ராஜ்குமார், கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப. தமிழழகன், காரைக்கால் மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜீம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாநில இளைஞர் அணி முன்னாள் துணைச் செயலாளர் அ. அசோகன், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்கள் எஸ்.டி.இசை, விஜயகதிரவன், மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ. சி.என்.விஜயபாலன், எம். பன்னீர்செல்வம், து.மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மயிலாடுதுறை கே. ஜி.சீனிவாசன், கண்ணகி பன்னீர், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர், தலைமைக் கழக பேச்சாளர் ஆரூர்.மணிவண்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் கோ.சி. மதி.திருமாவளவன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொள்கின்றனர்.

# குடியரசு துணைத் தலைவர் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 20 -

குடியரசுத் துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்! அவர்கள் மகிழ்ச்சியோடும், நல்ல ஆரோக்கியத்தோடும், இன்னும் பல ஆண்டுகள் நம் நாட்டிற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்திட வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழக தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 27.5.2023 சனிக்கிழமை காலை 11 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாநில நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும்,

கழக தொழிலாளர் அணி சிறப்பாக செயல்படுவது தொடர்பாக ஆலோசனையும் நடைபெற உள்ளது.

**பி.டி.சி.ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி



இல்லம் தேடி எம்.எல்.ஏ. திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 9B நத்தம் பண்ணை ஊராட்சியில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும் அனைத்து துறை அரசு அதிகாரிகளுடன் சென்று பொதுமக்களை சந்தித்து அப்பகுதி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கேட்டறிந்தும் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை மனுவாக அளித்தனர். கோரிக்கையை ஏற்று உடன் வருகை புரிந்த துறை சார்ந்த அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கை எடுக்க புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தினார். இந்நிகழ்வில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவர் சின்னையா, 9B ஊராட்சி மன்றத் தலைவர் சேதுராமன், முன்னாள் ஒன்றிய பொருளாளர், ஐயகோன்பட்டி செல்வராஜ்,மாணவரணி துணை அமைப்பாளர் வெற்றிசெல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பெரமண்டூரில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சரும் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரை யாற்றினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் எம். பழனியாண்டி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாசிலாமணி, ஒன்றியச் செயலாளர் மணிமாறன், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் உள்ளனர்.

### ஜல்லிக்கட்டுக்கு தடை இல்லை

# புதுக்கோட்டையில் இனிப்பு வழங்கல்!

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

புதுக்கோட்டை, மே 19 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் தொடர் சட்டப் போராட்டத்தின் விளைவாக, ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை என உச்ச நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுத்தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் நகர தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாவட்டக் கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட அவை தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் எம்.லியாக்கத் அலி, எம். லியாக்கத் அலி, நகரச் செயலாளர் ஆ.செந்தில், பொதுக் குழு உறுப்பினர் எம்.பழனியப்பன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் முனைவர் செ.குறிஞ்சிவாணன், பூங்குடி சிவா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, ஏ.வெற்றிச்செல்வம், சி.அரங்கநாயகம், த.சிவக்குமார், வி.ஆர்.எம்.தங்கராஜ், டி.குமார், மெய்க்குடிப்பட்டி முருகேசன், சுமோ பாலு, சதீஷ், நகர கழக நிர்வாகிகள் அ.ரெத்தினம், மா.மணிவேலன், ராமலிங்கம், வட்டக் கழக செயலாளர்கள் ரபீக், க.ராஜேந்திரன், விஜய் முருகேசன், பிரேம் ஆனந்த், காசி இளங்கோவன், ராமச்சந்திரன், மாலையீடு பிரபு, ச. அருண்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் காதர் கனி, கவிவேந்தன், பால்ராஜ், மூர்த்தி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ. கணேஷ், துணை அமைப்பாளர் ஞானவேல், அர்பன் சீனி, எல்.ஐ.சி ரமேஷ், மார்க்கெட் சீனி, அற்புத ஹென்றி, சி.சரவணன், சேதுராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


## கோயம்புத்தூர் மாநகராட்சி

கிழக்கு மண்டலம்
ஒப்பந்தப்புள்ளி தேதி மாற்றம் அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 1 / 2023 நாள்: 15.05.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள்/ நேரம் | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் / நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 5,6,7,8,9,22,23, 24,50,51,52,53,54,55,56,57, 58,59,60,61-க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் மற்றும் குடிநீர் விநியோக பணிகள் செய்தல். | 47 பணிகள் | 23.05.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 24.05.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in உதவி ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 641 005. தொலைபேசி எண். 0422-2595950. Email : eastaee@gmail.com

உதவி ஆணையர்
கிழக்கு மண்டலம்
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 211/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 18.05.2023

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா. தில்லைவில்லாளன்

### மே 20 (2008)



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

அண்ணாவின் 'சந்திரரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்


# மைனர் மோசஸ்

### மே 20 (1993)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.